**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 24.09.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 9 (LW12)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூபதி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2, A3, A4, A6, A7 ஆஜர். A1, A5 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது கமுதி குரூப்-2 கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் வல்லந்தை குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். அப்போது எனக்கு உதவியாளராக சுசிலாமேரி என்பவர் வேலை செய்து வந்தார். கடந்த 31.07.2021ம் தேதியன்று காலை 06.15 மணிக்கு மண்டலமாணிக்கம் காவல் ஆய்வாளர் எனக்கு போன் செய்து, ஒரு கொலை நடந்துள்ளதாகவும், அது சம்மந்தமாக விசாரிக்க வேண்டியுள்ளதாகவும், வல்லந்தை மோகன் என்பவரின் பலாப்பழத்தோட்டத்திற்கு வரச்சொன்னார். அன்று காலை 06.50 மணிக்கு மேற்படி இடத்திற்கு சென்றேன். அப்போது அங்கு எனது உதவியாளர்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:48:17 +0530

சுசிலாமேரி என்பவர் வந்தார். அங்கு காவல் ஆய்வாளர், ஏட்டையா மற்றும் காவலர்கள் இருந்தார்கள். அப்போது அங்கு ஆஜர் எதிரி கார்த்திகைசாமி (A4) அங்கு இருந்தார். ரமேஷ் குமார் என்ற எதிரி (A1) இருந்தார். (அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.) தமிழரசன் என்ற இளவர் இருந்தார்.

ஆய்வாளர் அவர்களை விசாரித்த போது, மூவரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். சாட்சி தற்போது எதிரி ரமேஷ்குமார் (A1) ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்கிறார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார். அந்த இடத்தில் வைத்து எதிரி ரமேஷ்குமாரிடமிருந்து அவரது பல்சர் பைக்கை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். பின்னர் எதிரி ரமேஷ்குமார் (A1) தன்னை அழைத்துச்சென்றால் அதே தோப்பில் பலாமரத்தின் கீழே தான் மறைத்து வைத்துள்ள இரண்டு அருவாள், ஒரு கத்தி, கிரிக்கெட் பேட், இரண்டு கட்டக்கம்பு, கைலி, சட்டை ஆகியவற்றை எடுத்து கொடுப்பதாக சொன்னார். அதன் பேரில் அவர் அடையாளம் காட்டிய இடத்திற்கு போலிசாருடன் சென்றோம். அங்கிருந்து மேற்படி பொருட்களை மற்றொரு அத்தாட்சியில் ஆய்வாளர் கைப்பற்றினார். எதிரி ரமேஷ்குமார் (A1) கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் நானும் எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம். எதிரி ரமேஷ்குமாரின் **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.6** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. **பல்சர் பைக் கைப்பற்றப்பட்ட அத்தாட்சி அ.த.சா.ஆ.7** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் கைப்பற்றிய பல்சர்பைக்தான் தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள பல்சர்பைக் ஆகும். அந்த **பல்சர்பைக் சா.பொ.6** ஆகவும், அதன் **புகைப்படங்கள் அ.த.சா.ஆ.8** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பொருட்கள் தான் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றிய பொருட்கள் ஆகும். அவை **இரண்டு**



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:48:20 +0530

**அருவாள்கள் சா.பொ.7 (வரிசை) ஆகவும், ஒரு கத்தி சா.பொ.8 ஆகவும், கிரிக்கெட் பேட் சா.பொ.9 ஆகவும், இரண்டு கட்டக்கம்பு சா.பொ.10 (வரிசை) ஆகவும், காவி கலர் கைலி சா.பொ.11 ஆகவும், கருப்பு கலர் சட்டை சா.பொ.12** ஆகவும் தற்போது குறியீடு செய்யப்படுகின்றன. மேற்படி பொருட்கள் கைப்பற்றப்பட்ட **அத்தாட்சி அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் ஆய்வாளரின் பெயர் எனக்குத் தெரியுமா என்றால் அவர் பெயர் அன்புபிரகாஷ் ஆகும். பொதுவாக வருவாய்த்துறைக்கும், காவலர்களும் இணக்கமாக இருப்பார்கள் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதியது ஏட்டையா ஆவார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் 7 பக்கம் உள்ளது என்பதால், அவற்றை எழுத எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 1 1/2 மணி நேரம் ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி ரமேஷ்குமார் கையொப்பம் போட்டாரா என்றால் போட்டார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த பக்கத்திலும் ரமேஷ்குமாரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எழுதுவதற்கு முன்பாகவே சான்றுப்பொருட்களை எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தார். பொருட்களை கைப்பற்றிய பின்னரே ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரியை கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி எழுதும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர், ஏட்டையா இருந்தார்கள். கைலி மற்றும் சட்டையின் நிறத்தை நான் எனது முதன்மை விசாரணையில் சொல்லவில்லை என்றாலும், நான் அதை பார்க்கவில்லை என்பதால்தான் நிறத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொல்வது சரியல்ல.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் இல்லை என்றாலும்,



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:48:23 +0530

காவல்துறையினரும், நாங்களும் நண்பர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:48:26 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .